**மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி, (தன்னாட்சி)**
**தஞ்சாவூர் – 5.**
**<u>சுற்றறிக்கை</u>**

04.08.2014

2014 - 2015 கல்வியாண்டு நவம்பர் 2014-ல் நடைபெற உள்ள முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் பருவத் தேர்விற்கான தன்னாட்சித் தேர்வுக் கட்டணத்தை எதிர்வரும் 11.08.2014 முதல் 14.08.2014 வரை கீழ்க்கண்ட விவரப்படியுள்ள உரிய நாட்களில் காலை 10.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை அறை எண்: 28ல் செலுத்துமாறு அறிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 11.08.2014 | (திங்கள்) | இளநிலை முதலாம் ஆண்டு |
| 12.08.2014 | (செவ்வாய்) | இளநிலை இரண்டாம் ஆண்டு |
| 13.08.2014 | (புதன்) | இளநிலை மூன்றாம் ஆண்டு |
| 14.08.2014 | (வியாழன்) | முதுநிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு |

தேர்வுக்கான விண்ணப்பங்கள் மற்றும் தேர்வுக் கட்டண விவரங்கள் சார்ந்த துறைகளில் வகுப்பு ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

முதலாமாண்டு (இளநிலை மற்றும் முதுநிலை) மாணவர்கள் தவறாமல் தங்கள் பெயர் மற்றும் பிறந்த தேதியை சரிபார்க்க +2 மதிப்பெண் நகல் இணைத்து விண்ணப்பத்தினை கொடுக்க வேண்டும்.

தேர்வு விண்ணப்பத்தில், வகுப்பு ஆசிரியர் விவரம் <u>சரிபார்த்து கையொப்பமிட வேண்டும் என குறிப்பாக தெரிவிக்கலாகிறது.</u>

மேற்கண்ட தேதிகளில் கட்டணம் செலுத்தத் தவறியவர்கள் 21.08.2014 (வியாழக் கிழமை) அன்று ஒரு நாள் மட்டும் ரூ.300/- அபராதத் தொகையுடன் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். எக்காரணம் முன்னிட்டும் 21.08.2014க்குப் பிறகு தேர்வுக் கட்டணம் செலுத்த அனுமதிக்க இயலாது என்றும் அறிவிக்கப்படுகிறது.

தேர்வுக் கட்டணம் செலுத்தாத முதலாமாண்டு மாணவர்களின் சேர்க்கை ரத்து செய்யப்படும்.

இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களில் அகமதிப்பீட்டில் (Internal Assessment) தேர்ச்சி பெறாதவர்களும் மேற்குறிப்பிட்டுள்ள தேதிகளிலேயே உரிய கட்டணத்தையும் சேர்த்து செலுத்த வேண்டுமெனவும் அறிவிக்கலாகிறது.

**தேர்வு நெறியாளர்**

**முதல்வர்**

முதல்வர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.

**<u>பெறுநர்:–</u>**
1. அனைத்து துறைத்தலைவர்கள்
2. அறிவிப்பு பலகை